1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**அ.வ.எண்.76/2019**

18.07.2019 -வா.சா. -திருமதி.கஸ்தூரி

**வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி-**

27.06.1994 தேதியிட்டு பார்வதியம்மாள் பெயரிலுள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8. பாரசாலை சார்பதிவளகத்தின் படிவம் 23ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9. எனவே பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

பிராதை படித்து பார்த்துள்ளேன் அதில் உள்ள விபரம் முழுமையாக தெரியும். அதிலுள்ள உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனக்கு எழுதபடிக்க தெரியும். பிராதில் 7வது பத்தியில், குறிப்பிடுள்ள விபரம் தெரியுமா என்றால் அது ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் மொழிபெயர்த்து சொன்னால் எனக்கு தெரியும். பிராதை எனது வழக்கறிஞர் தாக்கல் செய்வதற்கு முன் படித்து காண்பித்து, சட்டவிளக்கம் சொன்னார். எந்த பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பது எனக்கு தெரியும். எனது வீட்டின் கீழ்பக்க சுவரைபராமரிப்பதற்காகவும், கழிவுநீர், குடிநீர் இணைப்பு கொண்டுசெல்வதற்கு 1-1/4 அடி இடம் விட்டுள்ளேன். அதில் பிரதிவாதிகள் காங்கீரிட் தூண் அமைத்ததால் அந்த கட்டுமானத்தை இடித்து தர கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த பரிகாரத்திற்கு நீதிமன்ற கட்டணம் எவ்வளவு செலுத்தியுள்ளேன் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிராதில் 7வது பத்தியில், முதல் பரிகாரத்திற்கு தற்போதைய சந்தை மதிப்பு ரூ.40,000/- என மதித்து ரூ.1200/- நீதிமன்றம் கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் 1.25 அடிக்குரிய மதிப்பு தான் அது. மொத்த

சொத்தின் மதிப்பல்ல.1.25 அடிக்கு நீதிமன்றம் கட்டணம் செலுத்தியுள்ளதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதிகள் பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்தை பிரதிவாதிகள் ஒரு போதும் இடைஞ்சல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான 1.25 அடி இடத்தை இடைஞ்சல் செய்தாக்ள். என்ன காரணத்திற்காக பிராது 3 தபசில் சொத்துக்களாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் பத்திரம் முடிக்கும் போது எனக்கு விபரம் தெரியாது. நீதிமன்ற ஆணையர் வந்து அளந்து பார்த்த போது தான் விபரம் தெரியும். நீதிமன்ற ஆணையர் எனது சொத்தை அளந்த பிறகு தான் அது எனக்கு சொந்தமான சொத்து என்று தெரியும் என்றால் சரிதான். முழு சட்ட அறிவுடன் தான் பிராதை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதனடிப்படையில் பிரதிவாதிகள் எனது சொத்திற்கு ஆக்கிரமிப்பு செய்தார்கள், இடைஞுசல் செய்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு இடம் அங்கு இருப்பது தெரிந்ததால் தான் நான் அவ்வாறு சொன்னேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் இடம் எனக்கு இருப்பதாக தெரிந்து கொண்டேன் என்றால் எனது பத்திரம், மற்றும் பட்டாவின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். என் பெயரில் உள்ளது செட்டில்மெண்ட் பத்திரமாகும். அதை எனது தாயார் எனக்கு எழுதி கொடுத்தார். பட்டாவை நீதுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது எத்தனையாவது ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பட்டாவை தாக்கல செய்துள்ளதாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் எந்த ஆண்டு எழுதப்பட்டது என்றால் 2015 ஆகும். மாதம் தேதி ஞாபகம் இல்லை. பார்வதியம்மாளுக்கு சொத்து எப்படி வந்தது என்றால் நீதிமன்ற ஏலம் மூலமாக தாத்தா பெருமாளுக்கு

பாத்தியப்பட்டு, அதன்மூலம் அவர் பாரசாலை பத்திர அலுவலகத்தில் 1994ஆம் ஆண்டு எனது தாயார் பெயருக்கு பத்திரம் எழுதி கொடுத்தார். 1994ஆம் ஆண்டில் எனது தாயார் பெயருக்கு ஏற்பட்டதாக சொல்லும் பத்திரம் போலியான பத்திரம் என்றால் சரியல்ல.